ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351




புதன் ❖ ஜூலை. 19, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 285 ❖ ரூ.10

### பெங்களூரில் இரண்டுநாட்கள் நடந்த எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு 'இந்தியா'

# பெயர் சூட்டல்

**ஜனநாயகத்தையும் அரசியலமைப்பையும் காப்பாற்றவே ஒன்று கூடியுள்ளோம். காங்கிரஸின் விருப்பம் எல்லாம் அரசியல் சாசனம், ஜனநாயகம், மதச்சார்பின்மை, சமூக நீதியைப் பேணுவது மட்டுமே**

**பெங்களூரு, ஜூலை. 19–**
**வரும் 2024–ம் ஆண்டு மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பாஜகவுக்கு எதிராக வியூகம் அமைக்கவும், வலுவான முன்னணியை முன்வைக்கவும் பெங்களூருவில் கூடிய 26 எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு 'INDIA' (இந்தியா) என்ற பெயர் சூட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.**




*மக்களவைத் தேர்தலில் ஆளும் பாஜகவை தோற்கடிக்கும் நோக்கில் நிதிஷ் குமார், மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, கேஜ்ரிவால் உட்பட 26எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பெங்களூருவில் நேற்று இரண்டாவது நாளாக ஆலோசனையில் ஈடுபட்டனர்.*

*இந்தக் கூட்டத்தில் கூட்டணிக்கு ஏற்கெனவே இருந்த யுபிஏ (UPA) 'ஐக்கிய முற்போக்குக் கூட்டணி' என்ற பெயருக்குப் பதிலாக புதிய பெயர்களை பரிந்துரைக்க திங்கள்கிழமைநடந்தஇரவு விருந்தில் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி, நேற்று நடந்த 4 புதிய பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டது. இந்த நிலையில் 26 எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு 'INDIA' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதன் விரிவாக்கம்: I - Indian, N - National, D - Democratic, I - Inclusive, A - Alliance. அதாவது, இந்திய தேசிய ஜனநாயக உள்ளடங்கிய கூட்டணி.*

*எதிர்க்கட்சிகளின் பெங்களூரு கூட்டத்துக்குப் பின்னர் கட்சித் தலைவர்கள் ஒருங்கிணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறுகையில்,"இது,நாட்டின் ஜனநாயகத்தையும், அரசியலமைப்பையும் காப்பாற்றுதற்கான மிகவும் முக்கியமான ஒரு கூட்டம். நாட்டின் நலன் கருதி நாங்கள் அனைவரும் இங்கு ஒன்றிணைந்துள்ளோம்.*

*இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் பல்வேறு விவகாரங்களை விவாதித்து ஒருமித்த குரலில் தீர்மானங்களை ஆதரித்துள்ளனர். கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும்கூட்டணிக்கு இந்தப் பெயரை வைக்க ஒப்புக்கொண்டனர். முதலில் எங்களுடைய கூட்டணி யுபிஏ (UPA) ஐக்கிய முற்போக்கு கூட்டணி என்று அழைக்கப்பட்டது.*

*தற்போது 26கட்சிகளும் ஒருங்கிணைந்து வழங்கியுள்ள பெயர், 'இந்தியா'. Indian National Democratic Inclusive Alliance. அதாவது, இந்திய தேசிய ஜனநாயக உள்ளடங்கிய கூட்டணி.*

*எதிர்க்கட்சிகளின் அடுத்தக் கூட்டம் மும்பையில் நடைபெறும். அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும். அதேபோல் 11 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படும். குழு உறுப்பினர்களின் பெயர்கள் மும்பையில் அறிவிக்கப்படும்.*

*தேசிய ஜனநாயக கூட்டணி 30 கட்சிகளுடன் கூட்டம் நடத்துகிறது. அதில், பல கட்சிகளை நான் இந்தியாவில் கேள்விப்பட்டதே இல்லை. இதற்கு முன்பு அவர்கள் கூட்டம் எதுவும் நடத்தவில்லை. ஆனால், இப்போது ஒவ்வொருவராக சந்தித்துக்கொள்கிறார்கள். எதிர்க்கட்சிகளை பார்த்து பிரதமர் மோடி பயப்படுகிறார். நாங்கள் இங்கு ஜனநாயகத்தையும் அரசியலமைப்பையும் காப்பாற்றவே ஒன்று கூடியுள்ளோம். காங்கிரஸின் விருப்பம் எல்லாம் அரசியல் சாசனம், ஜனநாயகம், மதச்சார்பின்மை, சமூக நீதியைப் பேணுவது மட்டுமே. மாநில அளவில் நம்மில் சிலருக்கு இடையே கருத்து வேறுபாடுகள் இருப்பதை நான் அறிவேன். ஆனால், அந்த வேறுபாடுகள் சித்தாந்தம் சார்ந்தது அல்ல. மேலும், அந்த வேறுபாடுகள் பெரியதும் அல்ல. ஆகையால் சாமானிய மக்களின் நலனுக்காக, நடுத்தர வர்க்க மக்களுக்காக, இளைஞர்களுக்காக, ஏழைகளுக்காக, பட்டியலின மக்களுக்காக, பழங்குடியினருக்காக, சிறுபான்மையினருக்காக, திரைமறைவில் நசுக்கப்படும் அவர்களின் உரிமைக்காகப் போராடுவதற்காக நாம் ஒன்றிணைவோம்" என்று அவர் பேசியுள்ளார்.*

## உம்மன் சாண்டி உடலுக்கு மலர் வளையம் வைத்து முதல்வர் ஸ்டாலின் அஞ்சலி

**சென்னை , ஜூலை. 19–**
*பெங்களூரில் உடல்நலக்குறைவால் காலமான கேரள மாநில முன்னாள் முதல்வர் உம்மன்சாண்டி உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.*



*கேரள முன்னாள் முதல்வர் உம்மன் சாண்டி காலமானார். அவருக்கு வயது 79. இந்நிலையில், பெங்களூரில் உம்மன் சாண்டி உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அவரது குடும்பத்தினருக்கு அவர் ஆறுதல் கூறினார்.*

*புற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்ட உம்மன் சாண்டி, அதற்காக ஜெர்மனியில் சிகிச்சை பெற்றார். இந்த வருட தொடக்கத்தில் ஜெர்மனியில் இருந்து கேரளம் திரும்பிய அவர், பேசும் திறனையும் 90 சதவீதத்துக்கு மேல் இழந்திருந்தார். இதனால், உம்மன் சாண்டி அண்மைக் காலமாக அரசியல் நிகழ்ச்சிகள் எதிலும் அதிகம் பங்கேற்கவில்லை.*

*இந்தவருடம் பிப்ரவரி மாதம் நிமோனியாவால் பாதிக்கப்பட்டு திருவனந்தபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவரின் உடல்நிலை மேலும் மோசமடைய சிறப்பு சிகிச்சைக்காக ஏர் ஆம்புலன்ஸ் மூலம் பெங்களூரு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு தொடர்ந்து சிகிச்சையில் இருந்து நிலையில், சிகிச்சைப் பலனின்றி நேற்று காலமானார்.*

*கேரள சட்டசபையில் அதிக காலம் பதவி வகித்தவர் என்ற பெருமையை பெற்றவர் உம்மன் சாண்டி. தனது ஆஸ்தான தொகுதியான புதுப்பள்ளியை 18,728 நாட்கள் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி வரலாறு படைத்தவர். 51 ஆண்டுகள் மற்றும் மூன்று மாதங்களுக்கும் மேலாக எம்எல்ஏவாக காங்கிரஸ் சார்பில் இரண்டு முறை கேரளத்தின் முதல்வராக பதவி வகித்தவர் உம்மன் சாண்டி. 27 வயதில் 1970 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராகத் தொடங்கிய அவர், அதன் பிறகு 11 தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளார்.*

*2004 முதல் 2006 வரை மற்றும் 2011 முதல் 2016 வரை இரண்டு முறை மாநில முதலமைச்சராக இருந்தார். கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு அமைச்சரவைகளில் நான்கு முறை அமைச்சராகஇருந்ததைத் தவிர, நான்கு முறை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றினார். தமிழக அரசியல் கட்சித் தலைவர்களுடனும், தமிழகத்துடனும் அதிக நெருக்கம் காண்பித்தவர் அவர். அவரின் மறைவு, கேரள மாநிலத்தில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.*

## ராகுல் காந்தியின் மேல்முறையீட்டு மனுவை நாளை மறுநாள் விசாரிக்க உச்ச நீதிமன்றம் ஒப்புதல்

**புதுடெல்லி , ஜூலை. 19–**
**மோடி பெயர் குறித்த அவதூறு வழக்கில் தனக்கு விதிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு தடை விதிக்க மறுத்த குஜராத் உயர் நீதிமன்றம் உத்தரவை எதிர்த்துராகுல்காந்திதாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை ஜூலை 21–ம் தேதி நாளை மறுநாள் விசாரிக்க உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.**



*மூத்த வழக்கறிஞர் அபிஷேக்மனு சிங்வி, இந்த மனுவின் அவசரத்தை வலியுறுத்தி, அதனை விரைவாக விசாரிக்க வேண்டும் என்று நேற்று கோரிக்கை வைத்ததைத் தொடர்ந்து, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், இந்த மேல்முறையீட்டு மனுவின் விசாரணைத் தேதியை அறிவித்தார்.*

*மோடி பெயர் குறித்த அவதூறு வழக்கில் சூரத் செஷன்ஸ் நீதிமன்றம் விதித்த தீர்ப்பில் தலையிட முடியாது குஜராத் உயர் நீதிமன்றம், ராகுல் காந்தியின் மேல் முறையீட்டு மனுவினைத் தள்ளுபடி செய்யது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து ராகுல் காந்தி ஜூன் 15ம் தேதி உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தார்.*

*அவர் தனது மனுவில் அவர், "தேர்தல் பிரச்சாரத்தில் கூறப்பட்ட அவதூறு வார்த்தைகள், அரசியல் எதிரியை பற்றி குறிப்பிட்டது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இது எந்த சமுதாயத்தினருக்கும் எதிரான கருத்து அல்ல. அவதூறு அடிப்படையில் மக்களவை பிரதிநிதி ஒருவருக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட்டதன் மூலம் அந்ததொகுதி மக்களின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிப்பது தடுக்கப்பட்டுவிட்டது.*

*தண்டனைக்கு தடை விதிக்காவிட்டால், வயநாடுதொகுதி மக்கள் பல மாதங்களுக்கு பிரதிநிதித்துவம்இல்லாமல் பாதிப்பை சந்திப்பர். தேர்தல்பிரச்சாரத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட 3 நபர்கள் புகார் அளிக்கவும் இல்லை வழக்கு தொடுக்கவும் இல்லை. மோடி என்ற துணை பெயருக்கு அவமதிப்பு செய்யப்பட்டதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது. புகார் அளித்தவரும் மோத் வனிக சமாஜ் அமைப்பில் இருந்து வந்தவர் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். இவருக்கும், மோடி சமுதாயத்தினருக்கும் சம்பந்தம் இல்லை" என்று கூறியிருந்தார்.*

*வழக்கு பின்னணி: கடந்த 2019–ம் ஆண்டு கர்நாடகாவின் கோலார் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, "எல்லா திருடர்களுக்கும் மோடி என்று பெயர் வந்தது எப்படி?" என்றார். அவரது இந்தப் பேச்சு சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், மோடி சமூகத்தினரை ராகுல் காந்தி அவமதித்துவிட்டதாகக் கூறி, குஜராத் பாஜக எம்எல்ஏ பர்னேஷ் மோடி என்பவர், சூரத் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.*

*இதில் ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சூரத் நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் உத்தரவிட்டது. இதையடுத்து, வயநாடு மக்களவை தொகுதி எம்.பி. பதவியில் இருந்து ராகுல் தகுதியிழப்பு செய்யப்பட்டார். இந்த தண்டனைக்கு தடை விதிக்கக் கோரி, தனக்கு ஜாமீன் வழங்கிய சூரத் செஷன்ஸ் நீதிமன்றத்தில் ராகுல் மனு தாக்கல் செய்தார். ஆனால், தண்டனைக்கு தடை விதிக்க சூரத் செஷன்ஸ் நீதிமன்றம் மறுத்துவிட்டது.*

*இதையடுத்து, குஜராத் உயர் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி மேல்முறையீடு செய்தார். இதன் விசாரணை கடந்த மே மாதம் நடைபெற்றது. ஆனால், சூரத் செஷன்ஸ் நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக் காலத் தடை விதிக்க மறுத்த உயர் நீதிமன்ற நீதிபதி ஹேமந்த் பிரச்சாக், கோடை விடுமுறைக்குப் பின்னர் தீர்ப்பு வழங்குவதாக அறிவித்தார்.*

*இந்த வழக்கில் குஜராத் உயர் நீதிமன்றம் கடந்த 7–ம் தேதி தீர்ப்பு அளித்தது. அதில் நீதிபதி ஹேமந்த் பிரச்சாக் தெரிவிக்கையில், "ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை சரியானதுதான். இதற்கு ராகுல் காந்தி தடை கோர எந்தக்காரணமும் இல்லை. மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள், இதுபோன்ற அவதூறுக் கருத்துகளைத் தெரிவிக்கக் கூடாது. இந்த தீர்ப்பில் உயர் நீதிமன்றம் தலையிட முடியாது. எனவே, மனுதாரரின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்றார்.*

## "சாதி வெறியும், ஊழலும்தான் எதிர்க்கட்சிகளின் அடையாளம்" பிரதமர் மோடி சரமாரி தாக்கு

**புதுடெல்லி , ஜூலை. 19–**
**"சாதி வெறியும், ஊழலும்தான் எதிர்க்கட்சிகளின் அடையாளம்" என்று பிரதமர் நரேந்திர மோடி கடுமையாக விமர்சித்துள்ளார். மக்களவைத் தேர்தலில் ஆளும் பாஜகவை தோற்கடிக்கும் நோக்கில் சோனியா காந்தி, நிதிஷ் குமார், மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, கேஜ்ரிவால் உட்பட 26 எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பெங்களூருவில் ஆலோசனை மேற்கொண்டுள்ள நிலையில், பிரதமரின் இந்தப் பேச்சு முக்கியத்துவம் பெறுகிறது.**



*போர்ட் பிளேரில் வீர சாவர்க்கர் விமான நிலையத்தின் புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டிடத்தை காணொலி வாயிலாக பிரதமர் மோடி திறந்து வைத்தார். பின்னர் இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், "போர்ட் பிளேரில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய முனையத்தால், பயணம் மேலும் எளிமையாகும், வணிகம் செய்வதும் மேம்படும்" என தெரிவித்தார்.*

*பெங்களூருவில் நடைபெறும் எதிர்க்கட்சிகளின் கூட்டம் குறித்துப் பேசிய பிரதமர் மோடி, "அவர்களின் இந்தச் சந்திப்புக்கு ஒரு சிறப்பு இருக்கிறது. அது என்னவென்றால், கோடிக்கணக்கான ரூபாய் ஊழல் வழக்கில் ஜாமீனில் வெளியே வருபவர்கள் மிகுந்த மரியாதையுடன் பார்க்கப்படுகிறார்கள். ஒட்டுமொத்த குடும்பமும் ஜாமீனில் வெளியில் இருந்தால், அவர்கள் இன்னும் அதிக மரியாதைக்குரியவர்களாகிறார்கள். ஒருவர் ஒருசமூகத்தை அவமதித்து நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுகிறார் என்றால், அவர் கவுரவத்துக்கு உரியவராகிறார்.*

*2024 மக்களவைத் தேர்தலில் மீண்டும் நம்மை கொண்டு வர நாட்டு மக்கள் ஏற்கெனவே முடிவு செய்துள்ளனர். இந்த நிலையில், இந்தியாவின் அவல நிலைக்குக் காரணமானவர்கள் தற்போது தங்கள் கடைகளைத் திறந்துள்ளனர். அவர்களுடையகடைகளில் சாதி வெறி விஷமும், அபரிமிதமான ஊழலும் உத்தரவாதம். இப்போது, அவர்கள் பெங்களூரில் இருக்கிறார்கள்.*

*ஜனநாயகம் என்பது மக்களின், மக்களால், மக்களுக்காக எனும் தத்துவத்தைக்கொண்டது. ஆனால் வாரிசு அரசியல் கட்சிகளுக்கு, குடும்பம்தான் எல்லாமே. குடும்பத்துக்குத்தான் முதல் முன்னுரிமை; நாட்டுக்கு ஏதுமில்லை என்பதுதான் அவர்களின் பொன்மொழி. அவர்களிடம் வெறுப்பும், ஊழலும், தாஜா செய்யும் அரசியலும் உள்ளது. அவர்களுக்கு அவர்களின் குடும்ப வளர்ச்சி மட்டுமே முக்கியம்; நாட்டில் உள்ள ஏழைகளின் வளர்ச்சி அல்ல. வாரிசு அரசியலால் கடுமையாக பாதிக்கப்பட்ட நாடு இந்தியா. இனியும் அது தொடரக் கூடாது" என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.*

*முன்னதாக, நிகழ்ச்சியில் பேசிய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, "பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் நாட்டின் கிரீன்ஃபீல்ட் விமான நிலையங்களின் எண்ணிக்கை 14 ஆக விரிவடைந்துள்ளது. அடுத்த மூன்று நான்கு ஆண்டுகளில் விமான நிலையங்களின் எண்ணிக்கை 200–ஐத் தாண்டும்" என குறிப்பிட்டார்.*

*தற்போது திறக்கப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டிடம் ரூ.710 கோடியில் கட்டப்பட்டது. 40,800 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. வருடத்துக்கு 50 லட்சம் பயணிகளைக் கையாளும் திறன் கொண்டது. ஒரே நேரத்தில் 10 விமானப்படை விமானங்களை தரையிறக்க முடியும்.*

*இந்த விமான நிலையத்தில் இருந்து தற்போது புதுடெல்லி, சென்னை, ஹைதராபாத், விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களுக்குவிமானங்கள் இயக்கப்படுகின்றன. மேலும் பல நகரங்களுக்கு விமானங்கள் செல்லும் வகையில் விரிவுபடுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*



**புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள கே.வி. கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆலங்குடி தீயணைப்பு துறை சார்பில் தீ தடுப்பு ஒத்திகை பயிற்சி நடைபெற்றது. பள்ளித் தலைமை ஆசிரியர் தங்கராசு தலைமை வகித்தார், ஆலங்குடி தீயணைப்பு நிலைய அலுவலர் குழந்தைராசு தலைமையிலான மீட்பு குழுவினர்கள் தீ விபத்தை தடுப்பது பற்றிய செயல் விளக்கங்களை மாணவ, மாணவிகளுக்கு செய்து காண்பித்தனர். மேலும் அரசடிப்பட்டி பகுதியில் பொது மக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது.**

# இன்று

# 19-7-2023

சந்திர தரிசனம்

பூவரசு இலை அரைத்து வதக்கி கட்டினால் வீக்கம் குறையும்
சக வருடம் 1945 ஆஷாடம் 28

| சோபகிருது ஆடி 3 | JUL - WED புதன் | துல்ஹிஜ்ஜா 30 வளர்பிறை 200 / 165 |
|---|---|---|

வளர். துவிதியை 55.36 (கா. 04.15) பூசம் 06.26 (கா. 08.35) தியாஜ் 41.55 அகஸ் 31.18 சித்த. சந்திர தரிசனம். நாகபட்டினம் நீலாயதாட்சியம்மன் கைலாச வாகனத்திலும் இரவு மகிஷாசூர சம்ஹார லீலை. நயினார்கோவில் ஸ்ரீசௌந்திரநாயகி வீணை கான சரஸ்வதி அலங்காரம். நகக.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 10.45-11.45 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை | 4.45-5.45 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; கடக லக்கனம் இருப்பு நா. 5 வி. 09; சந்திராஷ்டமம் பூராடம் உத்திராடம்; கரணம் : 6-7.30; சூரிய உதயம் : 6.01

ஆழமறியாமல் காலை இடாதே

இராசிபலன்

| | |
|---|---|
| மேஷம் | பாராட்டு |
| ரிஷபம் | செலவு |
| மிதுனம் | அமைதி |
| கடகம் | நன்மை |
| சிம்மம் | நட்பு |
| கன்னி | நலம் |
| துலாம் | வெற்றி |
| விருச்சி | பாசம் |
| தனுசு | ஆதாயம் |
| மகரம் | சோர்வு |
| கும்பம் | பக்தி |
| மீனம் | ஓய்வு |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தீக்குச்சி தீப்பெட்டியிடம் கேட்டது, நீயும் நானும் ஒவ்வொரு முறை உரசும்போதும் நானே பற்றி எரிகிறேன், நீ எரிவதில்லையே ஏன்?

தீப்பெட்டி சொன்னது...தலைக்கனம் உள்ளவர்கள் விரைவில் அழிந்துபோவார்கள்




# சத்துணவு அமைப்பாளர் பணி நிறைவு வழியனுப்பு விழா



ஆலங்குடி, ஜுலை. 19–

ஆலங்குடி அருகில் உள்ள எம்.ராசியமங்கலம் அரசு தொடக்கப் பள்ளியில் 39 ஆண்டு காலமாக சத்துணவு அமைப்பாளராக அதே ஊரைச் சேர்ந்த சுப்பையா என்பவர் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்றதை பாராட்டி வழி அனுப்பு விழா தொடக்கப் பள்ளியில் நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியர் செபஸ்டியான் வரவேற்று விழாவினை ஒருங்கிணைத்தார். வட்டாரக் கல்வி அலுவலர் கருணாகரன் முன்னிலை வகித்தார். விழாவினை தலைமையேற்று தனக்கு ஆரம்பக் கல்வியை சொல்லிக் கொடுத்து ஓய்வு பெற்றிருக்கிற ஆசிரியர் அந்தோணிசாமியை அழைத்து கௌரவப்படுத்திய சுப்பையா கூறுகையில்:–

கல்வி வளர்ச்சி நாளை கொண்டாடும் இந்த வேலையில் காமராஜர் கொண்டு வந்த மதிய உணவு திட்டத்தில் பணிபுரிந்து இதே நாளில் ஓய்வு பெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. அறிவுப் பசிக்கு முன்பதாகவே அன்னப் பசியை நீக்கும் இந்தப் பணியில் 39 ஆண்டுகள் பணியாற்றி இருக்கிறேன் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியைகள் ஊர் பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார். விழாவில் விஜயன், ஹோமியோபதி மருத்துவர் கண்ணதாசன், கூட்டுறவு சங்கத் தலைவர் கருப்பையா, ஆசிரியர் ராணி, இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி கணேசன், அன்பு போன்றோர் வாழ்த்திப் பேசினார்கள். நினைவுப் பரிசு சத்துணவு அமைப்பாளருக்கு வழங்கப்பட்டது.

# பாஜக அச்சுறுத்தலால் திமுகவுக்கு பின்னடைவு இல்லை திருச்சி சிவா



புதுச்சேரி , ஜுலை. 19–

பா.ஜ.க-வின் அச்சுறுத்தலால் தி.மு.க.வுக்கு பின்னடைவு இல்லை என திருச்சிசிவா எம்.பி. கூறியுள்ளார்.

புதுச்சேரி வில்லியனூர் தொகுதி திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக்கூட்டம் வில்லியனூர் மேலண்ட வீதியில் நடந்தது. இக்கூட்டத்துக்கு பிறகு திருச்சி சிவா எம்.பி, செய்தியாளர்களிடம் கூறுகையில், "இந்தியாவில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் கடந்த சில காலமாகவே அதிகார மையங்களை வைத்து பா.ஜ.க அச்சுறுத்தும் போக்கு நடைபெற்று வருகிறது. தற்போது தமிழகத்தில் ஆரம்பித்திருக்கிறது. தமிழகத்தில் நடைபெற்று வரும் சோதனையின் காரணமாக எந்த வகையிலும் தி.மு.க.வுக்கு பின்னடைவு கிடையாது.

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பணி எளிதாகும். அதன் மூலம் தி.மு.க. வெற்றி நிச்சயமாக கிடைக்கும். மக்கள் அனைத்தையும் உணர்ந்துள்ளனர். மத்திய அரசு சோதனை செய்வதற்கான நோக்கங்களையும், காரணங்களையும் தெரிவிக்கவில்லை. இது குறித்து நாங்கள் எந்த வகையிலும் அச்சமடையவில்லை" என்று குறிப்பிட்டார்.

முன்னதாக, புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் சிவா பேசுகையில், "பா.ஜ.க பல்வேறு வாக்குறுதிகளை கொடுத்து இந்த மாநிலத்திற்கு ஆட்சிக்கு வந்தனர். அதில் குறிப்பாக மாநில அந்தஸ்து. அது குறித்து இதுவரை ஒரு படி கூட முன்னேறியது இல்லை. இன்றளவும் பொய் கூறி வருகின்றனர். சட்டப்பேரவையில் திமுக சார்பில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டு அரசு தீர்மானமாக ஏற்றுக்கொண்டனர். ஆனால் இதுவரை அந்த தீர்மானத்தை அனுப்பவில்லை. ஆளுநர் பதில் கூறுவதில்லை.

தமிழிசை ஆளுநர் என்பதில் இருந்து மாறி அரசியல்வாதியாக மாறிவிட்டார். புதுச்சேரியில் நடக்கும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் 100 கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாக கூறுகிறேன். ஊழல் நடக்கவில்லை என கூறுங்கள் நாங்கள் ஊழல் நடந்ததற்கான ஆதாரங்களை தருகிறோம். மக்களுக்கு ஒவ்வாத திட்டங்களை புதுச்சேரியில் செய்கின்றனர்" என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் திமுக கொள்கைப் பரப்புச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருச்சி சிவா, புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா ஆகியோர் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புரை ஆற்றினர். இந்தக் கூட்டத்தில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், எம்.எல்.ஏ.க்கள் அனிபால் கென்னடி, செந்தில் குமார், சம்பத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




# வழக்குகளில் விதிக்கப்படும் அபராத தொகையை செலுத்த கலைஞர் நூலகம் பெயரில் வங்கி கணக்கு ஐகோர்ட் உத்தரவு



மதுரை , ஜுலை. 19–

வழக்குகளில் விதிக்கப்படும் அபராதத் தொகையை செலுத்த மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் பெயரில் தனி வங்கி கணக்கு தொடங்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் வீரசிகாமணியை சேர்ந்த மாரியப்பன், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில், "வீரசிகாமணி கிராமத்தில் உள்ள பரோட்டா கடை மற்றும் கட்டிடம் ஆக்கிரமிப்பில் இருப்பதாக வருவாய்த் துறையினர் தெரிவித்துள்ளனர். அதனை அகற்ற அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். இது தொடர்பாக நான் அளித்த மனுவை பரிசீலிக்க உத்தரவிட வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்து நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், டி.பரத சக்கரவர்த்தி அமர்வு பிறப்பித்த உத்தரவு, "மனுதாரர் பரோட்டா கடை வைத்து உள்ளார். அவர் பொது இடத்தை ஆக்கிரமித்து கடை வைத்துள்ளார். இது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதை மறைத்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரே முன்வந்து ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும்.

மனுதாரருக்கு ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த அபராதத் தொகையை மதுரையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலக வங்கி கணக்கில் செலுத்த வேண்டும். இதற்காக உயர் நீதிமன்ற பதிவாளர் கலைஞர் நூலகம் பெயரில் புதிய வங்கி கணக்கு தொடங்க வேண்டும். இந்த வங்கி கணக்கில் செலுத்தப்படும் பணத்தை கலைஞர் நூற்றாண்டு நூலகத்துக்கு புத்தகங்கள் வாங்க பயன்படுத்த வேண்டும். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

# பாகிஸ்தானுக்கு மேலும் 600 மில்லியன் டாலர் கடன் வழங்கியது சீனா

*இஸ்லாமாபாத் , ஜுலை. 19–*

*பாகிஸ்தானுக்கு சீனா மேலும் 600 மில்லியன் டாலர் கடன் வழங்கி உள்ளது. இதனை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.*



*பாகிஸ்தானில் பிரதமரின் இளைஞர் விளையாட்டு முன்முயற்சியை அந்நாட்டு பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இஸ்லாமாபாத்தில் நேற்று தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், "சீனாவின் எக்ஸிம் வங்கி வழங்கிய கடன் காரணமாக நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 600 மில்லியன் டாலர் அதிகரித்துள்ளது.*

*நமது நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்க பாகிஸ்தான் விரும்புகிறது. கடன் மூலமாக அல்லாமல், வருமானத்தைப் பெருக்குவதன் மூலம் இதை சாதிக்க விரும்புகிறோம். விளையாட்டு, தகவல் தொழில்நுட்பம், தொழில் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் பாகிஸ்தான் இளைஞர்கள் சிறந்து விளங்கி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதால் இது சாத்தியமாகும்.*

*விளையாட்டு வீரர்கள் தங்கள் செயல்பாடுகள் மூலம் நாட்டுக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். விளையாட்டை மேம்படுத்துவதற்காக பட்ஜெட்டில் 5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்குப் பிறகு வாய்ப்பு அளிக்கப்பட்டால், கல்வி, திறன் மேம்பாடு மற்றும் விளையாட்டை ஊக்குவிப்பதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீட்டை எங்கள் கட்சி வழங்கும்" என்று தெரிவித்தார்.*

*பாகிஸ்தானின் நெருங்கிய நட்பு நாடான சீனா, கடந்த மூன்று மாதங்களில் அந்நாட்டுக்கு 5 பில்லியன் டாலர்களுக்கு மேல் கடன் அளித்துள்ளது. பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இதனை கடந்த வாரம் தெரிவித்தார்.*

*சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானுக்கு 3 பில்லியன் டாலர் வழங்க கடந்த ஜுன் 30ம் தேதி ஒப்புதல் அளித்தது. அதில், 1.2 பில்லியன் டாலர் தொகையை முதல் தவணையாக வழங்கி உள்ளது. அதோடு, சவூதி அரேபியாவிடம் இருந்து 2 பில்லியன் டாலர், ஐக்கிய அரபு அமீரகத்திடம் இருந்து ஒரு பில்லியன் டாலர் தொகையை பாகிஸ்தான் கடனாகப் பெற்றுள்ளது.*

*இவற்றின் காரணமாக பாகிஸ்தானில் பணப் பற்றாக்குறை அளவு குறைந்துள்ளது. கடந்த ஜுன் மாதத்தில் 334 மில்லியன் டாலர் தொகை உபரியாக இருப்பதாக பாகிஸ்தான் அரசு வங்கி அறிவித்துள்ளது.*

# வாய்க்கால் தூர்வாரும் பொழுது 5 அடி உயர கற்சிலை கண்டெடுப்பு





*தரங்கம்பாடி, ஜுலை– 19:*

*மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா நெடுவாசல் ஊராட்சி செறுகடம்பூர் கிராம சிங்கமடை பாசன வாய்க்காலில் கடந்த வாரம் 11 ஆம் தேதி ஜேசிபி உதவிகொண்டு தூர்வாரும் பொழுது மண்ணிற்கு அடியில் இருந்து 5 அடி உயரத்தில் பழம்பெறும் கருங்கல்லாலான பெருமாள் சிலை வாய்க்காலில் இருந்து எடுத்து கரையில் ஓரம் ஜேசிபி ஓட்டுநர் வைத்திருந்துள்ளார்.*

*தகவல் அறிந்த ஊராட்சி மன்ற தலைவர் உமாராணி ஜெயபால் தரங்கம்பாடி வட்டாட்சியர் மற்றும் பொறையார் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளார்.*

*அதைத் தொடர்ந்து வட்டாட்சியர் சரவணன் நேரில் ஆய்வு மேற்கொண்டு சிலையை கைப்பற்றி தகவலை தொல்லியல் துறைக்கு தெரியப்படுத்தினார். தொடர்ந்து பெருமாள் சிலைக்கு ஊர் பொதுமக்கள் பூஜைகள் செய்து வழி அனுப்பினர். வட்டாட்சியர் சரவணன் கைப்பற்றிய சிலையை தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சிலையை பாதுகாப்பாக வைத்துள்ளனர்.*

*நிகழ்வின் போது சரக வருவாய் ஆய்வாளர் கண்ணதாசன், கிராம நிர்வாகஅலுவலர்சவுரிராஜ் மற்றும் பொறையார் காவல்துறையினர் ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.*

# 'ஆளுங்கட்சி, எதிர்கட்சிகளின் அரசியல் விளையாட்டு' இபிஎஸ் மீது நடவடிக்கை கோரிய ஆர்.எஸ்.பாரதி வழக்கு தள்ளுபடி

சென்னை, ஜுலை. 19–

அதிமுக பொதுச் செயலாளர் எட்பபாடி பழனிசாமிக்கு எதிரான புகாரில் வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிடக் கோரி திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தாக்கல் செய்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அத்துடன், 'ஒவ்வொரு முறை ஆட்சி மாற்றம் ஏற்படும் போதும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் அரசியல் விளையாட்டுகளுக்காக, நீதிமன்றங்கள் விளையாட்டு மைதானங்களாக பயன்படுத்தப்படுகிறது' என்று உயர் நீதிமன்றம் வேதனை தெரிவித்துள்ளது.

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கடந்த 2018-ம் ஆண்டு ஜுன் மாதம் 18-ம் தேதி தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளித்தார். அந்த புகாரில், "தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான டெண்டர்களை ஒதுக்கியதன் மூலம் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் பதவியையும், முதல்வர் பதவியையும் தவறாகப் பயன்படுத்தியுள்ளார். சட்டவிரோதமாக ஆதாயம் அடைந்துள்ளார். அதனடிப்படையில், முதல்வர் எடப்பாடி பழனிசாமியை 1988ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 13ன் கீழ் தண்டிக்க வேண்டும்" என புகாரில் கோரிக்கை வைத்திருந்தார்.

இந்த மனு மீது தமிழக லஞ்ச ஒழிப்புதுறை நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து தனது புகாரின் பேரில் வழக்கு பதிந்து விசாரணை செய்து முதல்வராக இருந்த பழனிசாமி மீது நடவடிக்கை எடுக்க கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆர்.எஸ்.பாரதி 2018-ம் ஆண்டில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில், லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸாரின் விசாரணையின் அறிக்கை சீலிடப்பட்ட உறையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்து. இந்தப் புகாரில் முகாந்திரம் இல்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று வாய்மொழி தகவலாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே, இந்த வழக்கில் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி ஆர்.எஸ்.பாரதி தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த வழக்கில் வாதங்கள் நிறைவடைந்து, தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில், நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் நேற்று தீர்ப்பளித்தார். அந்த தீர்ப்பில், "எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக ஆர்.எஸ்.பாரதி கூறிய குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படை முகாந்திரம் உள்ளதா என்பதை கண்டறிய லஞ்ச ஒழிப்பு துறை கூடுதல் கண்காணிப்பாளர் 2018-ல் ஆரம்பகட்ட விசாரணை நடத்தியுள்ளார். 12 சாட்சிகள், 112 ஆவணங்கள் குறித்து கூடுதல் கண்காணிப்பாளர் விசாரணை நடத்தியுள்ளார். புகாரில் போதுமான ஆதாரங்கள் இல்லை. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வேண்டியவர்களுக்கு சாதகமாக எடப்பாடி பழனிசாமி டெண்டர் வழங்கினார் என்பதற்கும், சுய லாபம் அடைந்ததற்கும் எந்த ஆதாரமும் இல்லை என்று அறிக்கை அளித்துள்ளார். அந்த அறிக்கையை இயக்குனரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து புதிதாக ஆரம்பக்கட்ட விசாரணை நடத்த அனுமதி அளித்தது ஏன் என்பதற்கு எந்தவித காரணங்களும் தெரிவிக்கப்படவில்லை. இடைப்பட்ட காலத்தில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தவிர, வேறு எந்தவித மாற்றமும் நிகழாத நிலையில், இந்த வழக்கில் மீண்டும் புதிதாக ஆரம்பக்கட்ட விசாரணை நடத்த உத்தரவிட முடியாது. மேலும், அரசு என்பது சட்டப்படி ஒன்று தான், எந்தக் கட்சி அதிகாரத்துக்கு வருகிறது என்பது முக்கியமல்ல. அரசு எடுத்த முடிவை எந்த காரணங்களும் இல்லாமல் மாற்றவும் முடியாது. தனி நபரின் அல்லது அரசியல் கட்சியின் அரசியல் செயல் திட்டம் சட்டத்தின் ஆட்சியை வீழ்த்தி விடக்கூடாது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் அமலுக்கு வந்து 73 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அதிகாரிகள் தன்னிச்சையாக செயல்படும் இயல்பை இழந்து விட்டனர். ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகள் பிறப்பிக்கும் உத்தரவுப்படிதான் அவர்கள் செயல்படுகிறார்கள். ஒவ்வொரு முறை ஆட்சி மாற்றம் ஏற்படும் போதும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் அரசியல் விளையாட்டுகளுக்காக, நீதிமன்றங்கள் விளையாட்டு மைதானங்களாக பயன்படுத்தப்படுகிறது. நீதிமன்ற உத்தரவுகள் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகளில் விவாத பொருளாக மட்டுமே நீடிக்கிறது. சாதாரண ஏழை வழக்காடிகளுக்கான நீதிமன்றத்தின் நேரம் என்பது இதுபோன்ற வழக்குகளால் விழுங்கப்படுகிறது.

எனவே, எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக ஆர்.எஸ். பாரதி புகாரில் லஞ்ச ஒழிப்புத் துறையால் 2018-ல் நடத்தப்பட்ட ஆரம்பகட்ட விசாரணையில் குறைகான முடியாது. புதிய விசாரணைக்கு நடத்துவதற்கு எந்த காரணமுமில்லை. ஆட்சி மாற்றம் காரணமாக மட்டுமே உத்தரவிடப்பட்டு உள்ளது" எனக் கூறி, ஆர்.எஸ்.பாரதி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இருப்பினும், மனுதாரர் சம்பந்தப்பட்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம் என்று நீதிபதி பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

# "அமலாக்கத் துறை சோதனையை துணிச்சலுடன் எதிர்கொள்ளுங்கள்" – பொன்முடியிடம் பேசிய முதல்வர் ஸ்டாலின்



சென்னை , ஜுலை. 19–

அமைச்சர் பொன்முடியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். அப்போது, அமலாக்கத் துறை சோதனையை துணிச்சலுடனும், சட்ட ரீதியாகவும் எதிர்கொள்ளுங்கள் என்று அறிவுரை வழங்கினார்.

பெங்களூரு பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் ஸ்டாலின் நேற்று அமைச்சர் பொன்முடியிடம் பேசும்போது, அமலாக்கத் துறையினர் நடத்திய விசாரணை விவரங்களை கேட்டறிந்தார். அப்போது, துணிச்சலுடனும் சட்ட ரீதியாகவும் எதிர்கொள்ளுமாறு அவரிடம் அறிவுரை கூறினார். மேலும், மத்திய பாஜக அரசின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளை எதிர்த்து நின்று முறியடிக்க தார்மிக ரீதியாகவும், அரசியல் மற்றும் சட்ட ரீதியாகவும் திமுக என்றும் துணை நிற்கும் என்று பொன்முடியிடம் முதல்வர் தெரிவித்தார்.

தமிழக உயர்கல்வி துறை அமைச்சர் பொன்முடி. இவர் கடந்த 2006–2011 திமுக ஆட்சியில் உயர்கல்வி, கனிம வளத் துறை அமைச்சராக இருந்தார். அப்போது, விழுப்புரம் மாவட்டம் வானூர் அடுத்த பூத்துறை கிராமத்தில் அளவுக்கு அதிகமாக 2.65 லட்சம் லோடு லாரி செம்மண் அள்ளியதாகவும், இதனால் அரசுக்கு ரூ.28.36 கோடி இழப்பு ஏற்படுத்தியதாகவும் பொன்முடி மீது குற்றம்சாட்டப்பட்டது. இதையடுத்து, பொன்முடி, அவரது மகன் கவுதமசிகாமணி, உறவினர் ஜெயச்சந்திரன் உள்ளிட்ட 7 பேர் மீது விழுப்புரம் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் கடந்த 2012-ம் ஆண்டு வழக்கு பதிவு செய்தனர். நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் சட்டவிரோத பணப் பரிவர்த்தனை நடந்துள்ளதாக அமலாக்க துறைக்கு தகவல் கிடைத்ததாக கூறப்படுகிறது. அதன்படி, சென்னை, விழுப்புரத்தில் அமைச்சர் பொன்முடிக்கு சொந்தமான பல்வேறு இடங்களில் அமலாக்கத் துறையினர் திங்கள்கிழமை திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இந்த சோதனையில், அமைச்சரின் சென்னை வீட்டில், கணக்கில் வராத வெளிநாட்டு கரன்சி உட்பட ரூ.70 லட்சம் ரொக்கம், டைரி உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக தகவல் வெளியானது. இது தொடர்பாக பொன்முடியிடம் அமலாக்கத் துறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தினர்.

13 மணி நேரத்துக்கு மேலாக நடந்த சோதனைக்கு பிறகு, இரவு 8 மணி அளவில் அமலாக்கத் துறை அதிகாரிகள் அமைச்சர் பொன்முடியை விசாரணைக்காக நுங்கம்பாக்கம் சாஸ்திரி பவன் வளாகத்தில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்துக்கு அவரது காரில் அழைத்து சென்றனர். அங்கு நள்ளிரவை தாண்டி விசாரணை நீடித்தது. அப்போது, மகன் அசோக் உடன் இருந்தார். இந்த விசாரணை நேற்று அதிகாலை 3 மணியளவில் நிறைவு பெற்றது. இதன்பின் அவர் வீடு திரும்பினார்.

# வடமதுரை ஊராட்சியில் 40 ஆண்டுகளாக பயன்படுத்தி வந்த குடிசையை அகற்றியவர் மீது நடவடிக்கை எடுக்க தமிழக முதல்வருக்கு முதியவர் கோரிக்கை




ஊத்துக்கோட்டை, ஜூலை19–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை ஊராட்சி, எர்ணாகுப்பம் கிராமத்தில் கிராம நத்தம் பகுதி சுமார் 1.17 சென்ட் நிலம் உள்ளது. இந்த இடத்தில் ஆலப்பாக்கம் கிராமம், லட்சுமி அம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் ராதாகிருஷ்ணன் (70) என்பவர் கடந்த 40 ஆண்டு காலமாக குடிசை அமைத்து உபயோகப்படுத்தி வந்தார்.

அதில் விவசாய பொருட்களை வைத்துக்கொண்டு அங்கு தங்கியிருந்து குத்தகை நிலத்தில் விவசாயம் செய்து வந்தாராம். மேலும், அந்த குடிசைக்கு வடமதுரை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வீட்டு வரியையும் செலுத்தியுள்ளாராம். இந்நிலையில், திடீரென வடமதுரை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் கோதண்டன் என்பவர் இரவோடு இரவாக தனது அடி ஆட்களுடன் அப்பகுதிக்கு வந்துள்ளார். ஜேசிபி இயந்திரம் மூலம் அந்த குடிசையை அகற்றிவிட்டு அதிலிருந்த பொருட்களை அள்ளிச் சென்று விட்டாராம்.

இது குறித்து நியாயம் கேட்டபோது கோதண்டன் ஆத்திரம் அடைந்து முதியவர் ராதாகிருஷ்ணனுக்கு கொலை மிரட்டல் விடுத்தாராம். மேலும், இந்த கிராம நத்தம் இடத்தில் இருந்த ஒரு குளத்தையும், அருகில் இருந்த வரவு கால்வாய் பகுதியையும் கோதண்டன் தனியார் ஆலை கழிவுகளை கொட்டி புதைத்து விட்டதாகவும் ராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து திருவள்ளூர் மாவட்ட கலெக்டர், ஊத்துக்கோட்டை தாசில்தார் உள்ளிட்ட வருவாய் துறை அதிகாரிகளுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் புகார் மனு அளித்துள்ளாராம். இருப்பினும், உரிய தீர்வு கிடைக்கவில்லையாம். எனவே, தமிழக முதல்வர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயக் கூலித் தொழிலாளி ராதாகிருஷ்ணன் கோரிக்கைவிடுத்துள்ளார்.

# இந்து முன்னணி அமைப்பின் சார்பில் ஆரணியில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்

ஊத்துக்கோட்டை, ஜூலை19–

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இந்து முன்னணி அமைப்பின் சார்பில் சோழவரம் வடக்கு ஒன்றியம், ஆரணி பஸ் நிறுத்தம் அருகே தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. முன்னதாக பஸ் நிறுத்தம் அருகே உள்ள இந்து முன்னணி அமைப்பின் சார்பில் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர்.




இந்நிகழ்ச்சிக்கு, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட துணைத்தலைவர் மோகன் சுவாமி தலைமை தாங்கினார். இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மாவட்ட ஆர்.எஸ்.எஸ் ஜில்லா தர்மஜாகர் முத்தையா கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அப்பொழுது ஆரணி சம்பங்கி பிச்சாலீஸ்வரர் திருக்கோவிலுக்கு விரைவில் குடமுழுக்கு நடத்த வேண்டும். ஆரணி பஸ் நிறுத்தம் அருகே உள்ள பெருமாள் கோவில், பஜார் வீதியில் உள்ள காணியம்மன் கோவில் ஆகியவற்றை புனரமைப்பு செய்து பராமரிக்க வேண்டும் என கூறினர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வழக்கறிஞர் அணி பிரிவு ருத்ரமூர்த்தி, மகளிர் அணியை சேர்ந்த கௌசிரி, குமுதா, ஒன்றிய நிர்வாகி கே.நாகராஜ், விக்னேஷ், அஜித் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக அனைவரையும் ஆரணி பேரூர் தலைவர் ரங்கநாதன் வரவேற்றார். முடிவில், சோழவரம் வடக்கு ஒன்றிய தலைவர் கே.எம்.காணிமுத்து நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியின் போது பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த அரசு தொடர்பு பிரிவு மாநில தலைவர் அழிஞ்சிவாக்கம் எம். பாஸ்கரன் தலைமையில் பேரூராட்சி மன்ற உறுப்பினர் குமார் மற்றும் இக்கட்சியினர் சிறுதானிய விழிப்புணர்வு பேரணியை ஆரணியில் மேற்கொண்டனர். பின்னர், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ்நாடு தினம் புதுக்கோட்டையில் பேரணி

புதுக்கோட்டை, ஜூலை19–

1967 ஜூலை 18, மதராஸ் மாநிலம் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2022 முதல் இந்த நாளை தமிழ்நாடு தினமாகக் கொண்டாடப்படுகிறது. அதனை ஒட்டி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஊட்டும் நோக்கில், அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளியில், நாட்டுநலப்பணித்திட்டம் மற்றும் தொன்மை பாதுகாப்பு மன்றம் சார்பில் விழிப்புணர்வு



பேரணி நடத்தப்பட்டது. பேரணியை பள்ளி முதல்வர் சிவப்பிரகாசம் தலைமை வகித்து தமிழ்நாடு தினத்தின் முக்கியத்துவத்தை கூறினார். பேரணியில் பள்ளி மாணவ, மாணவிகள், நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் ப.சரவணன், துணை முதல்வர்கள் இன்பராஜ், ரவி. மற்றும் ஆசிரியர்கள், பிரபு, சித்ரா, செல்வன் உடற்கல்வி ஆசிரியர் சரவணன் ஆகியோர் பேரணியில் பங்கேற்றனர்.



நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட கோட்டுச்சேரி முக்குட்டு ஆலமரம் பகுதிக்கு ரூபாய் 9.50 லட்சம் ரூபாய் வளர்ச்சி நிதியின் மூலம் கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு பூமி பூஜை போடப்பட்டு தார் சாலை அமைக்கும் பணியானது நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா நேரில் சென்று நடைபெறும் பணியையும் சாலையின் தரம் குறித்து ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலுக்கு வருகை தந்த தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர், சட்ட மன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் கனிமவள கொள்ளையை கண்டித்து தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்து இருந்தார். அப்போது தமிழ்நாடு அரசின் பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ் ஆகியோரை நாகர்கோவில் அரசு சுற்றுலா மாளிகையில் சந்தித்து கலந்து உரையாடினார். இந்த சந்திப்பின் போது தமிழக வாழ்வுரிமை கட்சியின் மாநில துணை தலைவர் சோ.சுரேஷ் உடன் இருந்தார். மேலும் இச்சந்திப்பின்போது மாவட்ட செயலாளர்கள் தமிழ்செல்வன், அப்துல்லா, ரூபின் ஆன்றனி மற்றும் மாவட்ட துணை செயலாளர்கள் ராகுல், விஜயன் மற்றும் மாவட்ட தலைவர்கள் ஜெயபால், சதீஷ் நன்மாறன், பிரனேஷ் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்



1967.ஆம் ஆண்டு ஜூலை 18 தேதி பேரறிஞர் அண்ணாவால் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்ட நாளை, நேற்று தண்டையார்பேட்டை மண்டல.4. வார்டு .38.யில் பட்டேல் நகர் சென்னை உயர்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவ மாணவிகள் தமிழக முதலமைச்சர் உத்தரவுன் பேரில் பெருநகர சென்னை மாநகராட்சி இன் நாளை கொண்டாட விதமாக உறுதிமொழி எடுத்துக் கொண்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டனர் நிகழ்ச்சியினை 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு .கணேசன் எம். சி. துவக்கி வைத்தார். உடன் தலைமை ஆசிரியர் உமாராணி உதவி ஆசிரியர் சாமி மற்றும் ஆசிரியர்கள் பொதுமக்கள் எஸ்.கமருதீன், முகமது அப்பாஸ் கட்சியினர் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட கோட்டுச்சேரி முக்கூட்டு ஆலமரம் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டு வீடு சேதம் அடைந்த நிலையில் போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா கடந்த சில தினங்களுக்கு முன்பு அவர்களை நேரில் சந்தித்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு முதலுதவி அளித்த நிலையில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் பாதிப்படைந்த வீட்டிற்கு ரூபாய் 50,000/= ஆயிரத்திற்கான காசோலையினை நேற்று வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் துணை இயக்குனர் மதன்குமார் உடன் இருந்தார்கள்.

# திருக்களாச்சேரியில் விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கும் நிகழ்ச்சி

தரங்கம்பாடி, ஜூலை- 19:



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியம் திருக்களாச்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் -2023 ஆம் ஆண்டு இடு பொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு இடுபொருள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

விழாவில், வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சேகர், மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் நிர்வாக குழுத் தலைவர் மு. ஞானவேலன், தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்ஸ்ரீதர், செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.அப்துல் மாலிக், செம்பை வடக்கு ஒன்றிய செயலாளர் அமுர்த.விஜயகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.எம். சித்திக், ஊராட்சி மன்ற தலைவர்கள் பைலட், ராஜா, ரெங்கராஜ் மற்றும் அரசு அதிகாரிகள் திமுக பொறுப்பாளர்கள் விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# புதுச்சேரி அரசு காரைக்கால் நலவழித்துறையின் மூலம் ஐ எம் ஐ 5.0 திட்ட பணிகள் தொடக்கம்

புதுச்சேரி, ஜூலை19–



தீவிர இந்திர தனுஷ் திட்டத்தின் மூலம் நோய் தடுப்பு தடுப்பூசி 5.0 திட்டத்தை அறிமுகபடுத்தியதின் மூலம் தகுதியுடைய அனைத்து கைகுழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு நோய் தடுப்பு மருந்துகளை பெறுவதை உறுதி செய்வதில் இந்திய அரசாங்கம் அதன் தொடர்ச்சியான அறப்பணிப்பை நிரூபித்துள்ளது.

அதன் படி நமது காரைக்கால் மாவட்டத்திலும் குழந்தைகளையும் கர்ப்பிணி பெண்களையும் கொடிய நோய் தொற்றிலிருந்து பாதுகாக்க தடுப்பூசி போடாமல் விடுபட்டுள்ள குழந்தைகளை கண்டறிந்து கணக்கெடுக்கும் பணி நேற்று முதல் இரண்டு வாரங்கள் நடைபெறும் விடுபட்ட குழந்தைகளுக்கு முறையே ஆகஸ்ட் 7ஆம் தேதி முதல் 12 தேதி வரையும் செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி முதல் 16 ஆம் தேதிவரையும் அக்டோபர் மாதம் 9ஆம் தேதியிலிருந்து 14 ஆம் தேதிவரையும் மூன்று கட்டங்களாக நோய் தடுப்பு தடுப்பூசி வழங்கப்பட உள்ளது.

இப்பணியில் கிராமப்புற செவிலியர்கள் ஆஷா பணியாளர்கள் உங்கள் இல்லம் தேடி வருவார்கள் அவர்களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழப்பு கொடுத்து தடுப்பூசி போடத குழந்தைகளை பதிவு செய்து கொள்ளும்படி நலவழித்துறை துணை இயக்குனர் டாகடர் சிவராஜ்குமார் கேட்டுக்கொண்டார்.

நேற்று ஐ எம் ஐ 5.0 திட்டத்தின் பணிகளை நெடுங்காடு மேம்படுத்தப்பட்ட சுகாதர நிலயத்தின் பகுதிகளில் நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர் சிவராஜ்குமார் தொடங்கி வைத்தார் இந் நிகழ்ச்சியில் நோய்தடுப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் தேனாம்பிகை நெடுங்காடு மருத்துவ நிலையத்தின் மருத்துவ அதிகாரி டாக்டர் கேசவன் தடுப்பூசி திட்ட தொழில்நுட்ப உதவியாளர் சேதுபதி நோய்தடுப்பு திட்ட தொழில்நுட்ப உதவியாளர் சேகர் பெண் சுகாதார மேற்பார்வையாளர் எழிலரசி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

## சீர்காழி அருகே தீ விபத்தில் சேதமடைந்த வீட்டினை

# உடனடியாக பார்வையிட்டு நிவாரணம் வழங்கிய அதிமுக மாவட்ட செயலாளர் எஸ்.பவுன்ராஜ்

சீர்காழி, ஜூலை19–



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகேஎருக்கூர்கிறிஸ்தவ தெருவில் வசிக்கும் லூர்து விண்ணரசன் என்பவரின் மாடி வீட்டின் ஒரு அறை முழுவதும் தீப்பிடித்து எரிந்து அதில் இருந்த பொருட்கள் முழுவதும் எரிந்து சேதம் அடைந்தது.

இந்நிலையில் உடனடியாக அதிமுக மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் அப்பகுதிக்கு சென்று பாதிக்கப்பட்ட வீட்டினை பார்வையிட்டு ஆறுதல் கூறி 5,000 ரொக்க பணம் மற்றும் அரிசி காய்கறி உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினார்.

அப்பொழுது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மா.சக்தி, கொள்ளிடம் மேற்கு ஒன்றிய செயலாளர் சிவக்குமார் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# அமைச்சர் பொன்முடி, மகனின் ரூ.41.9 கோடி வைப்புத் தொகை முடக்கம் ரூ.81 லட்சம் ரொக்கம் பறிமுதல்: அமலாக்கத் துறை நடவடிக்கை

சென்னை, ஜூலை19–

சென்னை, விழுப்புரத்தில் அமைச்சர் பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி எம்.பி.யின் வீடு, அலுவலகம் உட்பட அவர் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத் துறைஅதிகாரிகள்நடத்திய சோதனையில் ரூ.81லட்சம் ரொக்கம், ரூ.13 லட்சம் மதிப்புள்ள வெளிநாட்டு கரன்சி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத் துறை கூறியுள்ளது. மேலும், ரூ.41.9 கோடி மதிப்புள்ள வைப்புத் தொகை முடக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமலாக்கத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ‘பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் (2002) தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி ஆகியோர் தொடர்புடைய 7 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. இந்த சோதனையின் போது, பல்வேறு ஆவணங்கள், ரூ.81 லட்சம் பணம், ரூ.13 லட்சம் மதிப்புள்ள வெளிநாட்டு கரன்சி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.41.9 கோடி மதிப்புள்ள வைப்புத் தொகை முடக்கப்பட்டுள்ளது’ என்று அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழக உயர் கல்வி துறை அமைச்சர் பொன்முடி. இவர் கடந்த 2006–2011 திமுக ஆட்சியில் உயர்கல்வி, கனிம வளத் துறை அமைச்சராக இருந்தார். அப்போது, விழுப்புரம் மாவட்டம் வானூர் அடுத்த பூத்துறை கிராமத்தில் அளவுக்கு அதிகமாக 2.65 லட்சம்



லோடு லாரி செம்மண் அள்ளியதாகவும், இதனால் அரசுக்கு ரூ.28.36 கோடி இழப்பு ஏற்படுத்தியதாகவும் பொன்முடி மீது குற்றம்சாட்டப்பட்டது. இதையடுத்து, பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி, உறவினர் ஜெயச்சந்திரன் உள்ளிட்ட 7 பேர் மீது விழுப்புரம் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் கடந்த 2012–ம் ஆண்டு வழக்கு பதிவு செய்தனர். நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் சட்டவிரோத பணப் பரிவர்த்தனை நடந்துள்ளதாக அமலாக்க துறைக்கு தகவல் கிடைத்ததாக கூறப்படுகிறது. அதன்படி, சென்னை, விழுப்புரத்தில் அமைச்சர் பொன்முடிக்கு சொந்தமான பல்வேறு இடங்களில் அமலாக்கத் துறையினர் திங்கள் கிழமை திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

13 மணி நேரத்துக்கு மேலாக நடந்த சோதனைக்குபிறகு, இரவு 8 மணி அளவில் அமலாக்கத் துறை அதிகாரிகள் அமைச்சர் பொன்முடியை விசாரணைக்காக நுங்கம்பாக்கம் சாஸ்திரி பவன் வளாகத்தில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்துக்கு அவரது காரில் அழைத்து சென்றனர். அங்கு நள்ளிரவை தாண்டி விசாரணை நீடித்தது. அப்போது, மகன் அசோக் உடன் இருந்தார். இந்த விசாரணை நேற்று அதிகாலை 3 மணியளவில் நிறைவுபெற்றது. இதன்பின் அவர் வீடு திரும்பினார். இதனிடையே, மாலை 4 மணிக்கு அமைச்சர் பொன்முடி மீண்டும் விசாரணைக்காக அமலாக்கத் துறை முன்பு ஆஜரானார்.

# டெல்லியில் தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டம் இது தடைகளை கடந்த வெற்றிக் கூட்டணி பிரதமர் மோடி ட்வீட்



புதுடெல்லி, ஜூலை.19-
இந்தியாவில் கடந்த இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களிலும் பாஜக பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்த நிலையில், வரும் தேர்தலில் பாஜகவை வீழ்த்த எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு களமிறங்க முடிவு செய்துள்ளன. இதற்கான ஆலோசனைக் கூட்டம் பெங்களூருவில் நேற்று நடைபெற்றது. 26 கட்சிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில், கூட்டணி குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் இன்று தொடங்கியது. இக்கூட்டத்தில் உள்துறை மந்திரி அமித் ஷா, பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங், மற்றும் பாஜகவின் தேசிய தலைவர் ஜே.பி. நட்டா, அதிமுகவின் எடப்பாடி பழனிச்சாமி, புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி, பாமகவின் ஏகே மூர்த்தி, த.மா.கா.வின் ஜிகே வாசன் மற்றும் அஜித் பவார், ஏக்நாத் ஷிண்டே உட்பட 38 கட்சிகளின் பிரதிநிதிகள் நாடெங்கிலும் இருந்து கூட்டம் நடைபெறும் அரங்கிற்கு வந்தனர்.

இக்கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "நாடு முழுவதும் இருந்து தலைவர்கள் பங்கேற்க வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. எங்கள் கூட்டணி பல்வேறு சோதனைகளை கடந்து, பல தடைகளை கடந்த ஒரு வெற்றிக்கூட்டணி. தேசிய வளர்ச்சிக்கும் மாநிலங்களின் நோக்கங்களை நிறைவேற்றவும் உருவானது நமது கூட்டணி," என குறிப்பிட்டுள்ளார். வரும் பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை எதிர்கொள்ள எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ள இந்த சமயத்தில், தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டம் நடைபெறுவது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.



▶ மதுரை மாநகராட்சி திருப்பரங்குன்றம் மண்டலம் பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாமில் (மேற்கு) மண்டலத் தலைவர் சுவிதா தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மாநகராட்சி ஆணையாளர் பிரவீன் குமார், மேயர் இந்திராணி, துணை மேயர் நாகராஜன், உதவி ஆணையாளர் சுரேஷ், நிர்வாகப் பொறுப்பாளர் பாலமுருகன், கண்காணிப்பாளர் செல்வகுமார்,ஏ.ஓ. ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்றுக் கொண்டனர்.



▶ புதுக்கோட்டை நகராட்சி, காமராஜபுரம், நகர்ப்புற நலவாழ்வு மையத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை செல்வவிநாயகம், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



▶ கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, மாநகர நல அலுவலராக பணியாற்றிய கே.எம் .அஜிதா, பணி இடமாற்றம் செய்யப்பட்டு, அரியலூர் மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குனராக பொறுப்பேற்றுக் கொண்டார்.அரியலூர் மாவட்ட அளவிலான வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் டாக்டர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட பலரும், வாழ்த்து தெரிவித்தனர்.

# குத்துக்கல் வலசையில் விஜய் மக்கள் இயக்கம் சார்பில் காமராஜர் பிறந்தநாள் விழா



தென்காசி, ஜூலை.19-
தென்காசி மாவட்டத் தலைமை தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பில் காமராஜரின் 121 வது பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது, தென்காசி மாவட்டம் குத்துக்கல் வலசையில் அமைந்துள்ள காமராஜரின் திரு உருவ சிலைக்கு மாவட்டத் தலைவர் சிவா தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினர்.

குத்துக் கல்வலசை ஆர்.சி பள்ளியில் கல்வி பயிலும் மாணவ,மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் கான், மாவட்டத் துணைத் தலைவர் சரவணன், மாவட்ட மாணவரணி தலைவர் சுபேர், துணை செயலாளர் கணேசமூர்த்தி, சாமுவேல், அருண் குமார், ஆய்க்குடி பேரூராட்சி தலைவர் ஆய்க்குடி அழகு, செயலாளர் மணிகண்டன், பொருளாளர் மாரி செல்வம், துணைச் செயலாளர் பரசுராமன், துணை பொருளாளர் ஆறுமுகம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட மாணவரணி தலைவர் சுபேர் அனைவருக்கும் நன்றி கூறினார், இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை தென்காசி மாவட்டத் தலைமை தளபதி விஜய் மக்கள் இயக்க நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

## கந்தர்வகோட்டையில் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான

# பகல் நேர பாதுகாப்பு மைய மாணவர்களுக்கு ரோட்டரி சங்கம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



கந்தர்வகோட்டை, ஜூலை.19-
புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ரோட்டரி சங்கத்தின் சார்பாக கந்தர்வகோட்டை ஐயப்பன் கோயில் அருகில் உள்ள மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் பகல் நேர பாதுகாப்பு மையத்தில் பயிலும் மாணவர்களுக்கு கந்தர்வகோட்டை ரோட்டரி சங்கத்தின் சார்பில் நேற்று நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

விழாவிற்கு ரோட்டரி சங்கத் தலைவர் கே. ராஜ்மோகன் தலைமை வகித்தார்,செயலாளர் எஸ். பிரசாத்,பொருளாளர் கே. ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் மாற்றுத்திறன் மாணவர்களுக்கான உதவிப்பொருட்கள் மற்றும் பேனா, பென்சில், காலனி, நோட்டு, புத்தகம் உள்ளிட்ட பொருட்களை வழங்கினர் . தொடர்ந்து மதியம் பள்ளியைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அறுசுவை மதிய உணவு வழங்கினர், நிகழ்ச்சியில் சிறப்பு ஆசிரியர் அறிவழகன், பிரியா மற்றும் ரோட்டரி சங்கத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மணமேல்குடி அருகே மஹாகாளியம்மன் கோயில் ஆடித்திருவிழாவை முன்னிட்டு பாய்மரப்படகு போட்டி




அறந்தாங்கி, ஜூலை.19-
புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அருகே வடக்குபுதுக்குடியில் மஹாகாளியம்மன்கோயில் ஆடித்திருவிழாவை முன்னிட்டுபாய்மரப்படகு போட்டி நடைபெறுவது வழக்கம். அதேபோல 18-ஆம் ஆண்டாக நேற்று அக்கிராமத்தில் பாய்மரபடகு போட்டி நடைபெற்றது.இந்தபடகுப் போட்டியில் புதுக்கோட்டை ,தஞ்சாவூர்,ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டத்தை சேர்ந்த 19 படகுகள் கலந்து கொண்டது. ஒரு படகிற்கு ஆறு நபர்கள் மட்டுமே போட்டியில் கலந்து கொள்ளலாம் ஒரு படகில் ஒரு பாய், ஒரு கடற்பலகை, ஒரு பலகை, மட்டுமே பயன்படுத்த வேண்டும்

போன்ற விதிமுறைகளோடு நடத்தப்பட்ட இந்த போட்டியில் படகு புறப்பட்ட இடத்தில் இருந்துஐந்துகிலோமீட்டர் தூரம் படகுகள் சென்று வர வேண்டுமென தூரம் நிர்ணயிக்கப்பட்டது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பிடித்து வெற்றி பெற்ற ராமநாதபுரம் மாவட்ட நம்புதளை, மோர்பனை, தொண்டி புதுக்குடி உள்ளிட்ட பாய்மர படகுகளை சேர்ந்த வீரர்களுக்கு முதல் பரிசுரூ 50 ஆயிரம் இரண்டாம் பரிசு ரூ 40 ஆயிரம் மூன்றாம் பரிசு ரூ 30ஆயிரம் உள்ளிட்ட மூன்றுரொக்கப் பரிசுத்தொகை மற்றும் வெற்றிக்கோப்பைகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது, இந்த போட்டியினை தஞ்சாவூர் ராமநாதபுரம் புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதி மீனவகிராமங்களைச் சேர்ந்த ஏராளமானோர் கண்டு ரசித்தனர்.

# மூன்றாவது கட்டமாக சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை உயர்த்தப்பட்டது




சென்னை, ஜூலை.19-
நிலவின் தென்துருவத்தில் சாப்ட் லேண்டிங் முறையில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான் - 3 விண்கலத்தை இஸ்ரோ அனுப்பியுள்ளது. ஆந்திர மாநிலம் ஹரிகோட்டாவில் இருந்து கடந்த 14-ம் தேதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்ட சந்திரயான்-3 புவியின் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

அப்போது பூமியில் இருந்து குறைந்தபட்சம் 170 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 36,500 கி.மீ. தொலைவும் கொண்ட சுற்றுப்பாதையில் சுற்றத் தொடங்கியது. இந்த நீள்வட்ட சுற்றுப்பாதையை படிப்படியாக உயர்த்தி விண்கலம் நிலவுக்கு நெருக்கமாக கொண்டு செல்லப்படுகிறது. ஏற்கனவே இரண்டு கட்டங்களாக சந்திரயான் - 3 விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு உயர்த்தப்பட்ட நிலையில், மூன்றாவது முறையாக நேற்று சுற்றுப்பாதை மேலும் உயர்த்தப்பட்டது. மூன்றாவது சுற்றுப்பாதையை உயர்த்தும் செயல்முறை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகவும், விண்கலம் இப்போது 51400 கிமீ x 228 கிமீ சுற்றுப்பாதையில் உள்ளது என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்த சுற்றுப்பாதையானது அடுத்து 20ம் தேதி மேலும் உயர்த்தப்படுகிறது. அன்றைய தினம் மதியம் 2 மணி முதல் 3 மணி வரை இதற்கான பணிகளை மேற்கொள்ள இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. இவ்வாறு ஐந்து முறை சுற்றுப்பாதை உயர்த்தப்பட்ட பின் நிலவின் ஈர்ப்பு விசைக்குள் உந்தி தள்ளப்படும். அதன்பிறகு சந்திரயான்-3 நிலவை நோக்கி தனது பயணத்தை தொடங்கும். நிலவின் ஈர்ப்பு விசைக்குள் சென்றதும், சுற்றுப்பாதை படிப்படியாக குறைக்கப்படும். இறுதியாக விண்கலம் நிலவின் மேற்பரப்பில் இருந்து 100 கிமீ தொலைவில் உள்ள ஒரு வட்ட சுற்றுப்பாதையை அடையும். குறிப்பட்ட வட்டப்பாதையில் இருந்து நிலவின் மேற்பரப்பில் ஆகஸ்ட் 23 அல்லது 24 அன்று சாப்ட் லேண்டிங் முறையில் விண்கலம் தரையிறங்கும்.

# ஆலங்குடி அருகே நள்ளிரவில் கூரை வீடு தீப்பிடித்து எரிந்ததில் பணம் மற்றும் பொருட்கள் எரிந்து நாசம்



ஆலங்குடி, ஜூலை.19-
புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள கூழையன்காடு கிராமத்தை சேர்ந்தவர் சிங்காரமகன் சுந்தரலிங்கம் . இவர் தனியார் கல்லூரியில் செக்யூரிட்டியாக பணிபுரிந்து வருகிறார். இவர் கூழையன்காட்டில் உள்ள தனது கூரை வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு இரண்டு மணியளவில் கூரை வீட்டில் தீ பற்றி புகையுடன் எரிந்துள்ளது. இதனால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சுந்தரலிங்கம் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் அலரியடித்து எழுந்து தீயை அணைக்க முயற்சித்தனர். இவர்களது அலறல் சத்தம் கேட்டு எழுந்த அக்கம் பக்கத்தினர் ஆலங்குடி தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுத்தனர். தகவலின் பெயரில் விரைந்து வந்த தீயணைப்புத்துறையினர் தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர். இந்த தீவிபத்தில் வீட்டு வேலைக்காக வைத்திருந்த ரூ. 20ஆயிரம்ரொக்கம் வீட்டுக்கு தேவையான வயரிங் சாமான்கள் பாத்திரங்கள் மற்றும் உணவுபொருட்கள் முற்றிலும் எரிந்து சாம்பலானது. மின் கசிவா அல்லது முன் விரோதம் காரணமாக தீ விபத்து சம்பவம் ஏதும் நடந்துள்ளதா என்று ஆலங்குடி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரியலூரில் தமிழ்நாடு நாள் விழா பேரணி மற்றும் ஃபோட்டோ கண்காட்சி துவக்க விழா



அரியலூர், ஜூலை.19-
அரியலூரில் தமிழ்நாடு நாள் விழா பேரணி மற்றும் ஃபோட்டோ கண்காட்சி துவக்க விழா நடைபெற்றது.

அரியலூர் தாலுக்கா அலுவலகத்தில் துவங்கிய தமிழ்நாடு நாள் விழா பேரணியை போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்ற, பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்ட பேரணி துவக்க விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் அரியலூர் வழக்கறிஞர் கு. சின்னப்பா, ஜெயங்கொண்டம் க.சொ.க .கண்ணன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர், பேரணி அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை சென்றடைந்தது

அதைத்தொடர்ந்து அங்கு நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழா குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் திறந்து வைத்துப் பார்வையிட்டார். தமிழ்நாட்டிற்கு, தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய சூலை 18 ஆம் நாளினை “தமிழ்நாடு நாள்” விழா என கொண்டாட தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து “தமிழ்நாடு நாள்” விழா தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்டத்திலும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை மற்றும் தமிழ் வளர்ச்சி துறை சார்பில், “தமிழ்நாடு நாள்” விழா கொண்டாடப்பட்டது.

இதையொட்டி சிறப்பு புகைப்படக் கண்காட்சி நேற்று 18.ம் தேதி முதல் 23ம் தேதி வரை தொடர்ந்து 6 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் “தமிழ்நாடு நாள்” விழா குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டு தமிழ்நாடு நாள் வரலாறு குறித்து அறிந்து கொள்ள வேண்டுமென போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார். தமிழ்நாடு நாள் விழா தொடர்பாக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, போக்குவரத்து துறை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் பரிசு மற்றும் சான்று உள்ளிட்டவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் விஜயலட்சுமி, மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுருளிபிரபு, உதவி மக்கள் செய்தி தொடர்பு அலுவலர்(செய்தி) பிரபாகரன், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் .சித்ரா, அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், வட்டாட்சியர் கண்ணன், பள்ளிக்கல்வி ஆய்வாளர் பழனிசாமி, அரசு அலுவலர்கள் பள்ளி மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# புதுக்கோட்டை ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலில் அனுமன் திருச்சபையினர் சார்பில் சிறப்பு வழிபாடு




புதுக்கோட்டை, ஜூலை.19-
புதுக்கோட்டை ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலில் அனுமன் திருச்சபையினர் சார்பில் ஆடி அமாவாசையை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. உற்சவர் ஆஞ்சநேயர் அலங்கரிக்கப்பட்ட தேரில் பக்தர்கள் வடம் பிடித்து பல்வேறு வீதி வழியாக வலம் வந்தனர்

புதுக்கோட்டை தெற்கு 4 -ஆம் வீதி மார்கெட் சந்திப்பிலுள்ள இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் ஆடி அமாவாசை சிறப்பு வழிபாடு நடைபெற்றது.


கோவிலில் மூலவர் ஆஞ்சநேயர் சுவாமிக்கு, பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் மலர் வட மாலை அலங்காரத்திலும், மஹா தீபாராதனை நடைபெற்றது, நிகழ்வில் திரளான பக்தர்கள் வருகைதந்து சுவாமியை வழிபட்டனர். பின்னர் அனைவருக்கும், அனுமன் அன்னதான மண்டபத்தில் பிரசாதம் வழங்கப்பட்டது. இரவு உற்சவர் ஆஞ்சநேயர் அலங்கரிக்கப்பட்ட தேரில் பக்தர்கள் வடம் பிடித்து பல்வேறுவீதிவழியாகவலம் வந்தனர் . ஏற்பாடுகளை, அனுமன் திருச்சபையினர், ஆன்மிகநெறியாளர் ஆனந்தன் தலைமையில் சிறப்புடன் நிர்வாகிகள் செய்திருந்தனர்

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.




# பெங்களூருவில் கூடிய எதிர்கட்சிகளின் கூட்டணிக்கு இந்தியா என்று பெயர் சூட்டல்

# மூன்றாவது கட்டமாக சந்திரயான் -3 விண்கலத்தின் சுற்றுப்பாதை அதிகரிப்பு






# அமைச்சர் பொன்முடி, மகனின் 41 கோடி முடக்கம்: ஈடி நடவடிக்கை


| சென்னை / புதுக்கோட்டை | 19.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**கவாஜா நசிமுத்தீன்** , பாக்கித்தானின் 2வது பிரதமர் (பி.1894) (இ.1965)



**ஜயந்த் நாரளீக்கர்** , இந்திய வானியலாளர், வானியற்பியலாளர் (பி.1938)



**ஒக்ரம் இபோபி சிங்** , மணிப்பூர் அரசியல்வாதி (பி.1948)



**அல்தமஸ் கபீர்** , இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி (பி.1948)



**ரோஜர் பின்னி** , இந்தியத் துடுப்பாளர் (பி.1955)



**தில்லார பர்னான்டோ** , இலங்கைத் துடுப்பாளர் (பி.1979)



## இன்றைய நினைவு நாள்

**சுவாமி விபுலாநந்தர்** , ஈழத்து தமிழிசை ஆய்வாளர், கவிஞர், எழுத்தாளர், துறவி, தமிழ்ப் பேராசிரியர் (பி.1892) (இ.1947)

